## இன்றைய வேளாண் செய்திகள்

### காஷ்மீர் வெள்ளம் எதிரொலி: ஆப்பிள் விலை கடுமையாக உயர வாய்ப்பு

நீலகிரி ஆப்பிள் அறுவடை முடிவடைந்ததாலும், காஷ்மீரில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு ஆப்பிள் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாலும் ஆப்பிள் விலை கடுமையாக உயரத் துவங்கியுள்ளது. நீலகிரிக்கு பெரும்பாலும் காஷ்மீரில் இருந்துதான் ஆப்பிள்கள் விற்பனைக்கு வருகின்றன. இங்கு சிம்லா ஆப்பிள்களும் கணிசமான அளவு விற்கப்படுவதுண்டு. இந் நிலையில், குன்னூரில் உள்ள சிம்ஸ்பார்க் பழவியல் பண்ணையில் உள்ள மரங்களில் ஆப்பிள் அறுவடை முடிந்ததாலும், காஷ்மீரில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள காரணமாகவும் சிம்லாவில் இருந்து வரும் ஆப்பிள்களை நம்பியே தற்போது பழ வியாபாரிகள் உள்ளனர். சில வாரங்களுக்கு முன் ஒரு கிலோ ஆப்பிள் ரூ.120 முதல் ரூ. 130 வரை விற்கப்பட்டது. தற்போது கிலோ ரூ.140 முதல் ரூ.150 வரை விற்கப்படுகிறது. இன்னும் சில நாள்களில் ரூ.200 வரை விலை உயர வாய்ப்பு இருப்பதாக பழ வியாபாரிகள் தெரிவித்தனர்.

### பாசனத்துக்காக அமராவதி அணை இன்று திறப்பு: முதல்வர் உத்தரவு



திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி அணையிலிருந்து பாசனத்துக்காக திங்கள்கிழமை (செப். 22) முதல் தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட

அறிவிப்பு: திருப்பூர், கரூர் மாவட்டங்களில் உள்ள பழைய, புதிய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயி களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. அதனை ஏற்று அமராவதி அணையில் இருந்து பாசனத்துக்காக திங்கள்கிழமை (செப். 22) முதல் தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளேன். இதன் மூலம் திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 47 ஆயிரத்து 117 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

## <u>பாலில் கலப்படத்தைத் தடுக்க சிறப்பு குழுக்களை நியமிக்க வேண்டும்</u>

பாலில் கலப்படம் மற்றும் பால் திருட்டை தடுக்க சிறப்பு குழுக்களை நியமிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பால் உற்பத்தியாளர்கள் சங்க மாநில பொதுச் செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்க மாநில பொதுச் செயலர் கே. முகமது அலி நீடாமங்கலத்தில் ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டி: தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பாலில் 80 சதவிகிதம் தனியாருக்கு விற்பனை செய்யப்படுகிறது. 20 சதவிகிதம்தான் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விறபனை செய்யப்படுகிறது. தனியார் அதிக விலை கொடுத்து பாலை உற்பத்தியாளர் களிடமிருந்து கொள்முதல் செய்கிறார்கள். ஆனால் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தியாளர்களுக்கு குறைந்த விலையை நிர்ணயம் செய்கின்றன. பசும் பாலுக்கு லிட்டருக்கு ரூ. 30ம், எருமைப் பாலுக்கு லிட்டருக்கு ரூ. 40மும் வழங்க வேண்டும். பால் உற்பத்தியாளர் சங்கங்களில் ஊழல் பெருகிவிட்டது. சென்னை போன்ற நகரங்களில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு பால் எடுத்துச் செல்லும்போது வேன்களை நிறுத்தி பால் அதிக அளவில் திருடப்படுகிறது. பாலில் கலப்படம் செய்யப்படுகிறது. இதேபோல ஒன்றிய அளவில் உள்ள சங்கங்களிலிருந்து மாவட்ட ஆவின் நிறுவனங்களுக்கு டேங்கர் லாரிகளில் கொண்டு செல்லப்படும் பாலிலும் கலப்படம் செய்யப்படுகிறது. கூட்டுறவு சங்கங்களில் நடைபெறும் இதுபோன்ற ஊழல்களுக்கு மாவட்ட, மாநில அளவிலான கூட்டுறவுத் துறை அதிகாரிகளும் பொறுப்பேற்க வேண்டும். இதுபோன்ற செயல்களால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய வருமானம்

பாதிக்கப்படுகிறது. பல்வேறு வகையிலும் பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவதால் வரும் 7-ம் தேதி தமிழ்நாடு முழுவதும் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் போராட்டம் நடத்தவுள்ளது. பாலில் கலப்படம், பால் திருட்டு போன்றவற்றை தடுக்க தமிழக அரசு சிறப்பு குழுக்களை நியமித்து கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் முகமது அலி.

## குமரி அரசு பழப் பண்ணையில் தோட்டக்கலை அதிகாரிகள் ஆய்வு

கன்னியாகுமரி அரசு பழப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் செடிகள், மரக்கன்றுகள் தரமான முறையில் உள்ளனவா என்பது குறித்து தேசிய தோட்டக்கலை வாரிய ஆலோசகர் வி.பொன்னுசாமி தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் ஆய்வு செய்தனர். ஆய்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: இந்தியா முழுவதும் ஆயிரக்கணக்கான அரசு மற்றும் தனியார் தோட்டக்கலை பண்ணைகள் அமைந்துள்ளன. தமிழகத்தில் அரசு சார்பில் 54 பண்ணைகளும், 90-க்கும் அதிகமான தனியார் பண்ணைகளும் அமைந்துள்ளன. பொதுவாக மரங்கள் பல்லாண்டுகள் பயன்தரக் கூடியவை. இதனால் பழப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மரக்கன்றுகள் மிகவும் தரமானதாக இருப்பது அவசியம். தரமற்ற முறையில் உற்பத்தி செய்யப்படும் மரக்கன்றுகள் சரியான விளைச்சலைத் தராது. எனவே அரசு மற்றும் தனியார் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மரக்கன்றுகள், செடிகளின் தரம் எவ்வாறு உள்ளது என்பது குறித்து ஆய்வு செய்து வருகிறோம். தமிழகத்தில் இதுவரை 25-க்கும் அதிகமான பண்ணைகளில் ஆய்வுப் பணிகளை முடித்து சான்றிதழ்கள் வழங்கியுள்ளோம். இதற்காக தேசிய அளவில் கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆய்வின்போது பண்ணை அமைந்துள்ள இடம், மண்ணின் தரம், நீரின் தன்மை, தாய்ச்செடிகளின் வீரியம், செடிகளை பராமரிக்கும் தொழிலாளர்களின் திறமைகள் குறித்து ஆலோசிக்கப்பட்ட பின் சான்றிதழ் வழங்கப்படும். 40 முதல் 50 மதிப்பெண்கள் பெறும் பண்ணைக்கு 1 நட்சத்திர அந்தஸ்தும், 51 முதல் 60 வரை மதிப்பெண்கள் பெறும் பண்ணைக்கு 2 நட்சத்திர அந்தஸ்தும், 61 முதல் 70 வரை

மதிப்பெண்கள் பெறும் பண்ணைக்கு 3 நட்சத்திர அந்தஸ்தும், 71 முதல் 80 வரை மதிப்பெண்கள் பெறும் பண்ணைக்கு 4 நட்சத்திர அந்தஸ்தும், 81-க்கும் மேல் மதிப்பெண்கள் பெறும் பண்ணைகளுக்கு 5 நட்சத்திர அந்தஸ்தும் வழங்கப்படும். தமிழகத்தில் உள்ள அனைத்துப் பண்ணைகளிலும் ஆய்வுப் பணிகள் நிறைவு பெற்றதும் பண்ணைகளை மேம்படுத்துவது தொடர்பாக அரசுக்கு பரிந்துரை செய்ய உள்ளோம் என்றார் அவர். ஆய்வின்போது தேசிய தோட்டக்கலை வாரிய துணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, திருப்பதிசாரம் வேளாண் மைய பேராசிரியர்கள் ஜே.ஜேன்சுஜாதா, ரிச்சர்டு கென்னடி, பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி மைய பேராசிரியர் ஜே.பிரேம ஜோஷ்வா, நாகர்கோவில் தோட்டக்கலை துணை இயக்குநர் பி.சிவகுமார், உதவி இயக்குநர் எம்.அசோக் மேக்ரின், கன்னியாகுமரி அரசு தோட்டக்கலை அலுவலர் எஸ்.என்.திலீப், உதவி அலுவலர் எஸ்.குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

## 26-ல் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் வரும் 26ஆம் தேதி கடலூரில் நடக்கிறது. கடலூர், பீச் சாலையில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் வரும் 26ஆம் தேதி காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் தலைமையில் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் நடக்கிறது. கூட்டத்தில், விவசாயிகள் தங்களது வேளாண் சார்ந்த குறைகளைத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்படும். கூட்டத்தில் பேச விரும்புபவர்கள், அன்று காலை 10.30 மணிக்கு முன்பாக, கூட்டம் நடைபெறும் அரங்கில் தங்களது பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். குறைகளை மனுக்களாகவும் கொடுக்கலாம். இந்த மனுக்கள் மீது சம்மந்தப்பட்டத் துறை அதிகாரிகளின் மேல்நடவடிக்கைக்கு பரிந்துரை செய்யப்படும்.

இன்றைய வேளாண் செய்திகள்

**கரீப் பருவ நெல் உற்பத்தி 9 கோடி டன்னாக சரியும்**



புதுடில்லி:மத்திய அரசின் தற்போதைய புள்ளி விவரத்தில், நடப்பு 2014 – 15ம் கரீப் பருவத்தில், நாட்டின் நெல் உற்பத்தி, 8.80 கோடி டன்னாக சரிவடையும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டின் இதே பருவத்தில், இதன் உற்பத்தி, 9.17 கோடி டன்னாக அதிகரித்து காணப்பட்டது.இதே போன்று, முக்கிய உணவு தானியங்கள் உற்பத்தி, 3.15 கோடி டன்னிலிருந்து, 2.70 கோடி டன்னாகவும், பருப்பு வகைகள் உற்பத்தி, 60 லட்சம் டன்னிலிருந்து, 52 லட்சம் டன்னாகவும் குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளன. காலம் தவறிய பருவமழை மற்றும் தாமதமான விதைப்பு பணிகள் உள்ளிட்டவை, தானியங்கள் உற்பத்தியில் நிச்சயம் தாக்கத்தை ஏற்படும் என, வேளாண் செயலர் ஆஷிஸ் பகுணா தெரிவித்தார். இந்நிலையில், எதிர்வரும் ராபி பருவத்தில் (அக்., – மார்ச்), 9.40 கோடி டன் கோதுமை உற்பத்தி செய்ய மத்திய அரசு, இலக்கு நிர்ணயித்துள்ளது.சென்ற ஆண்டின் இதே பருவத்தில், 9.25 கோடி டன் கோதுமை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்திருந்த நிலையில், அதன் உற்பத்தி சாதனை அளவாக, 9.59 கோடி டன்னாக எகிறியது என்பது, குறிப்பிடத்தக்கது.

## முந்திரி ஏற்றுமதி ரூ.2,031 கோடியாக சரிவு



புதுடில்லி:நாட்டின் முந்திரி ஏற்றுமதி, நடப்பு 2014–15ம் நிதியாண்டின் முதல் ஐந்து மாத காலத்தில் (ஏப்.,ஆக.,), 2,031 கோடி ரூபாயாக குறைந்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும் போது, 4 சதவீதம் குறைவாகும்.இதே போன்று, அளவின் அடிப்படையிலும், இதன் ஏற்றுமதி, 12 சதவீதம் சரிவடைந்து, 46,240 டன்னாக குறைந்துள்ளது. முந்திரி ஏற்றுமதியில், நமக்கு போட்டி நாடாக விளங்கும், வியட்நாமில், இதன் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, அந்நாடு குறைவான விலையில், முந்திரியை ஏற்றுமதி செய்துவருகிறது. இதன் காரணமாகவே, சர்வதேச சந்தையில், இந்திய முந்திரிக்கான தேவை சுணக்கம் கண்டுள்ளது.அதேசமயம், பண்டிகை காலத்தை ஒட்டி, இந்தியாவின் கச்சா முந்திரி இறக்குமதி, 19 சதவீதம் உயர்ந்து, 5.79 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. ஆப்ரிக்கா, மற்றும் இதர ஆசிய நாடுகளில் இருந்து, இந்தியா, கச்சா முந்திரியை அதிகளவில் இறக்குமதி செய்து கொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆத்தூரில் மஞ்சள் ஏலம் ரூ. 66 லட்சம் விற்பனை

ஆத்தூர் : ஆத்தூர், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடந்த ஏலத்தில், 2, 000 மூட்டை மஞ்சள், 66 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், கடலூர்,

பெரம்பலூர், திருவண்ணாமலை, நைனார்பாளையம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஆகிய வெளிமாவட்டம் மற்றும் ஆத்தூர், பகுதியைச் சேர்ந்த, 240 விவசாயிகள் விளைவித்த, 2, 000 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம் 5,000 ரூபாய், அதிகபட்சம் 7, 449 ரூபாய், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம் 4, 000 ரூபாய், அதிகபட்சம் 6, 109 ரூபாய்க்கு விற்பனையானது. ஏலத்தில், 10 வியாபாரிகள் கலந்து கொண்டு, 2, 000 மூட்டை மஞ்சளை, 66 லட்சம் ரூபாய்க்கு வாங்கி சென்றனர்.

## ரூ.9.80 லட்சம் மதிப்பில் வாழைத்தார், தேங்காய் ஏலம்

கோபிசெட்டிபாளையம் : கோபி, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், 9.80 லட்சம் ரூபாயில் வாழைத்தார்கள் மற்றும் தேங்காய் ஏலத்தில் விற்பனையானது. கோபி வேளாண்மை உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், புதன் மற்றும் சனிக்கிழமைகளில், வேளாண் விளை பொருட்கள் ஏலம் நடக்கிறது.அதன்படி, கோபியில் நேற்று நடந்த ஏலத்தில், மொத்தம், 6,500 தார்கள் வரத்தாகியது. கதளி ஒரு கிலோ, 54 ரூபாய்க்கும், நேந்திரம், 38, செவ்வாழை தார், 800, ரொபஸ்டா, 410, தேன்வாழை, 600, ரஸ்த்தாளி, 550, மொந்தன், 350 ரூபாய், பூவன், 450 ரூபாய், பச்சை நாடான், 250 ரூபாய்க்கு விலை போனது. விற்பனைக்கு வந்த அனைத்து தார்களும் மொத்தம், ஒன்பது லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.இந்த தார்களை, திருப்பூர் மற்றும் ஊத்துக்குளி பகுதியை சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.இதேபோல், தேங்காய்களுக்கான ஏலமும், நேற்று நடந்தது. மொத்தம், 6,000 தேங்காய்கள் வரத்தனது.பத்து முதல், 17.80 ரூபாய் வரை விலை போனது. அனைத்து தேங்காய்களும், 80 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது.

## தேயிலையில் கூடுதல் மகசூல் பெற அறிவியல் கருத்தரங்கில் யோசனை

பந்தலுார் : 'தேயிலை தோட்டங்களில் புதிய முறையிலான உரம் மற்றும் நிழல் தரும் மரங்களை பயன்படுத்தினால், கூடுதல் மகசூல் பெற இயலும்' என, 'உபாசி' ஆராய்ச்சி மைய இயக்குனர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

நீலகிரி, -வயநாடு தோட்ட அதிபர்கள் சங்கத்தின் 21வது தேயிலை அறிவியல் கருத்தரங்கம், பந்தலுாரில் நடந்தது. சங்க முன்னாள் தலைவர் மகேஷ்நாயர் தலைமை வகித்தார். 'தேயிலை மகசூலை அதிகரிப்பதற்கான வழிமுறைகள்' குறித்து பேசினார்.தொடர்ந்து, 'உபாசி' ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் ராதாகிருஷ்ணன் பேசுகையில், “மாறி வரும் காலநிலையால், வெப்பமயமாதல் அதிகரித்துள்ளது. அதற்கேற்ற விவசாய முறைகளுக்கு, தோட்ட நிர்வாகங்கள் தங்களை மாற்றிக்கொண்டால், கூடுதல் மகசூல் பெற இயலும்,” என்றார். 'தாவரவியல் ஆராய்ச்சி மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய ரகங்கள், மண்ணியல் ஆராய்ச்சி முறையில் புதிய ரக ஊட்டச்சத்து, சி.டி.சி. மற்றும் ஆர்தோடக்ஸ் முறையில் தேயிலை துாள் தயாரிக்கும் முறைகள்' குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை, சங்க செயலாளர் வாசுதேவன் தலைமையிலான நிர்வாகிகள் செய்கி௫ந்தனர்.

**<u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>**

அரியலூர்; அரியலூர் மாவட்டம், செந்துறை தாலுகா, சோழன்குடிக்காடு கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நடந்த கோமாரி நோய் தடுப்பூசி முகாம் துவக்க விழாவுக்கு, சோழன்குடிக்காடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க தலைவர் பூங்கோதை தலைமை வகித்தார். முகாமை, கால்நடை பாரமரிப்புத்துறை உதவி இயக்குநர் மருதைராஜ் துவக்கி வைத்தார். பால் பெருக்கு திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முருகானந்தம், சமூக ஆர்வலர் சோழன்குடிக்காடு கணேசன், பால் உற்பத்தியாளர் சங்க செயலாளர் மதியழகன் முன்னிலை வகித்தனர். முகாமில், கால்நடை டாக்டர்கள் தர்மராஜ், விஜயராஜ், கால்நடை ஆய்வாளர்கள் அஞ்சுகம், ரவி, ராம்தாஸ், கால்நடை பராமரிப்புத்துறை பணியாளர்கள், 100க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போட்டனர்.

## சிறுதானியங்கள்,காளான் வளர்ப்பு கருத்தரங்கு

பட்டிவீரன்பட்டி : அய்யம்பாளையத்தில் சக்தி அறக்கட்டளை சார்பில் சிறுதானியங்கள் மதிப்புக்கூட்டல், பால் காளான் வளர்ப்பு கருத்தரங்கு நடந்தது. அறக்கட்டளை நிறுவனர் கவிஞர் சக்திஜோதி வரவேற்றார். தேனி வேளாண் அறிவியல் மைய தலைவர் பச்சைமால் பேசினார். சிறுதானியங்களின் சிறப்புகள் குறித்து ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி சடையாண்டி பேசுகையில்,""அதிகமான லாபம், உடல் நலன், மகசூல் பெறுவதற்கு சிறுதானியங்களை பயிரிட விவசாயிகள் முன் வரவேண்டும். நெல்லிற்கு 2 ஆயிரம் ரூபாய் செலவு செய்து, 500 ரூபாய் லாபம் கிடைக்கும். சிறுதானியங்களை 500 ரூபாய் செலவில் விளைவித்து, இரு மடங்கு லாபம் சம்பாதிக்கலாம். சிறுதானியங்களை மதிப்பு கூட்டல் மூலம் உணவு தயார் செய்து விற்றால் கூடுதல் லாபம் கிடைக்கும். உர சாகுபடியை குறைத்து, இயற்கை வேளாண் சாகுபடிக்கு மாற வேண்டும்". இவ்வாறு அவர் பேசினார். மதிப்புகூட்டல் சம்பந்தமாக பரமக்குடி ரமேஷ், பால் காளான் வளர்ப்பு குறித்து பிரியா, தேனீ வளர்ப்பு குறித்து தண்டாயுதபாணி, அசோலா வளர்ப்பு, காலி இடங்களில் காய்கறி உற்பத்தி குறித்து ராமநாதபுரம் விவசாயி சிவா ஆகியோர் பேசினர். டிரஸ்ட் செயலாளர் ஜெயா நன்றி கூறினார்.

## ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் கொத்தவரை விலை உயர்வு

ஒட்டன்சத்திரம் : கேரள வியாபாரிகள் அதிகமாக கொள்முதல் செய்யத் தொடங்கியதால் ஒட்டன்சத்திரத்தில் கொத்தவரை விலை அதிகரித்துள்ளது. ஒட்டன்சத்திரம், கன்னிவாடி, தருமத்துப்பட்டி, தாராபுரம் உள்ளிட்ட பகுதிகளில் அறுவடை செய்யப்பட்ட கொத்தவரை ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இவற்றை கேரள வியாபாரிகள் அதிகம் வாங்கிச் செல்கின்றனர். ஓணத்தின் போது கொத்தவரையின் தேவை அதிகரித்தும் வரத்து குறைவாகவும் இருந்ததால் கிலோ ரூ.20க்கும் அதிகமாக விற்றது. ஓணம் முடிந்து 2 நாட்கள் கேரள

வியாபாரிகள் காய்களை வாங்க வரவில்லை. இதனால் கொத்தவரை விலை வீழ்ச்சி அடைந்து கிலோ ரூ.6க்கு விற்றது. கேரளாவில் பருமழை பெய்து வந்ததால் அவர்கள் காய்கறிகளை முழு அளவிற்கு கொள்முதல் செய்யவில்லை. கடந்த வாரம் 4 நாட்களாக கிலோ ரூ.9க்கு விற்றது. கடந்த 3 நாட்களாக மழை குறைந்ததால் கேரள வியாபாரிகள் கொத்தவரையை முன்பு போல வாங்கத் துவங்கினர். இதனால், கொத்தவரை விலை ரூ.9 லிருந்து ரூ.13 ஆக உயர்ந்தது. இவற்றின் விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## பயிர் சாகுபடி அதிகரிக்க மானியம் வழங்க முடிவு

திண்டுக்கல் : பயிர் சாகுபடி பரப்பளவை அதிகரிப்பதற்காக புதிய தோட்டங்களை உருவாக்கும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தின் சார்பில், சாகுபடி பரப்பளவை அதிகரிப்பதற்காக முன்வரும் விவசாயிகளை ஊக்குவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. திராட்சை பயிரிடுபவர்களுக்கு எக்டேருக்கு ரூ. 30 ஆயிரமும், மா தோட்டம் அமைப்பவர்களுக்கு எக்டேருக்கு ரூ. 7650 ம் வழங்கப்படும். எலுமிச்சைக்கு எக்டேருக்கு ரூ.12 ஆயிரமும், தேவையான உரம், பூச்சி கொல்லி மருந்துகளும் வினியோகிக்கப்படும். சம்பங்கி மலர் சாகுபடி மாவட்டத்தில் தற்போது அதிகரித்துள்ளது. இதில் பல்வேறு ரகங்கள் உள்ளன. விவசாயிகளுக்கு லாபம் தரும் மலர் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக எக்டேருக்கு ரூ. 37,500 ம், மல்லிகைக்கு ரூ.10 ஆயிரமும், நாற்றுகளும் வழங்கப்படுமென துணை இயக்குனர் ராமநாதன் தெரிவித்தார்.

## கிராமங்கள் தோறும் விவசாயிகளை சந்திக்க அலுவலர்களுக்கு உத்தரவு

கம்பம் : கிராமங்கள் தோறும் சென்று, விவசாயிகளின் சாகுபடி பிரச்னைகளை தீர்க்க வேண்டும் என்றும் உதவி விவசாய அலுவலர்களுக்கு கிடுக்கிப்பிடி போடப்பட்டுள்ளது. மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப உணவு பொருள்கள் உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்க விவசாயத்துறை முடுக்கி விடப்பட்டுள்ளது. இன்னொரு பசுமைப் புரட்சிக்கு தயாராக முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். எனவே விவசாயத் துறைக்கு நிதி ஒதுக்கீடுகள் வாரி இறைக்கப்படுகின்றன. விவசாயத்

துறையில் உதவி விவசாய அலுவலர்கள், விவசாய அலுவலர்கள், உதவி,துணை, இணை இயக்குநர்கள் நிலையில் அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர். இதில் உதவி விவசாய அலுவலர்களே, விவசாயிகளுடன் நேரடி தொடர்புடையவர்கள். களப்பணியாளர்களாக விளங்கும் இவர்கள் தான் இந்த துறையின் உயிர்நாடிகள். எனவே உதவி விவசாய அலுவலர்களுக்கு பணிப்பழு அதிகமாக தரப்படுகிறது. மண் மாதிரி எடுத்தல், சாதனை மகசூல் பார்த்தல், தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல், அடங்கல் தயாரித்தல் என பல பணிகள் வழங்கப்படுகிறது.இந்நிலையில், விவசாயத்துறை கிராமங்களுக்கு ரெகுலர் "விசிட்' என்ற குண்டையும் தூக்கிபோட்டுள்ளது. அதாவது உதவி விவசாய அலுவலர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களுக்கு ரெகுலராக விசிட் செய்ய வேண்டும் என்றும், விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்பங்களை சொல்லித்தர வேண்டும் என்றும் கூறியுள்ளது. மேலும் ஏதாவது சாகுபடி பிரச்னை என்றால், உடனுக்குடன் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

உதவி விவசாய அலுவலர்கள் கூறுகையில்,""இந்த திட்டம் முன்பு வழக்கத்தில் இருந்தது தான். இடையில் சில காலம் இல்லாமல் இருந்தது. இப்போது மீண்டும் ரெகுலர் விசிட் போக சொல்கின்றனர்.இது பெரிய பிரச்னையில்லை. ஆனால் உதவி விவசாய அலுவலர்களுக்கு மட்டுமே பணிகள் தரப்படுகிறது.மற்ற நிலைகளில் இருப்பவர்களுக்கு இந்த அளவிற்கு பணிசுமை இல்லை' என்றனர்.

## <u>கூடுதல் விலைக்கு உரம் புகார் தெரிவிக்கலாம்</u>


தேனி : தேனி விவசாயக்துறை அறிக்கையில் கூறியிருப்பகாவகு: விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களிலும், தனியார் உரக்கடைகளிலும் உள்ளன. ஒரே ரக உரத்திற்கு கம்பெனிகள் வெவ்வேறு விலை நிர்ணயம் செய்குள்ளன. இந்க குழப்பக்கை பயன்படுத்தி வியாபாரிகள் உரங்களை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். எனவே விவசாயிகள் உரம் வாங்கும் போகு உர மூடையில் எவ்வளவு விலை அச்சிடப்பட்டுள்ளதோ அதனை மட்டும் கொடுத்தால்

போதும். உரம் வாங்கும் போது கட்டாயம் பில் வாங்க வேண்டும். கூடுதல் விலை கேட்டால் 04546-250506 என்ற எண்ணுக்கு புகார் செய்ய வேண்டும், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோமாரி நோய் தடுக்க 1 கோடி மாடுகளுக்கு தடுப்பூசி




கோவை: தமிழகத்தில் கோமாரி நோய் பரவலை தடுக்க 1 கோடி மாடு களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. தமிழகத்தில் கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் கோமாரி என்ற கால், வாய்ப்புண் நோய் மாடுகளுக்கு பரவியது. இதில் மாநில அளவில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் இறந்தன. இதை தொடர்ந்து நோய் தடுப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப் பட்டது. நோய் கட்டுபாட்டிற்குள் வந்த நிலையில், கடந்த மாதத்தில் நாகர்கோவில், கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் மாடுகளுக்கு கோமாரி நோய் அறிகுறி இருப்பதாக தெரியவந்தது. கோமாரி நோய் பாதிப்பு தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கால்நடை வளர்ப் பவர்கள் வலியுறுத்தினர். கடந்த மார்ச் மாதம் நோய் தடுப்பு பணி நடத்தப்பட்டது. தற்போது இரண்டாம் கட்டமாக, மீண்டும் கோமாரி நோய் தடுப்பூசி பணி நடத்த தமிழக அரசு, கால்நடை பராமரிப்பு துறைக்கு

உத்தரவிட்டது. கடந்த 1ம் தேதி தடுப்பூசி பணி நடத்தப்பட்டது. நேற்று வரை தடுப்பூசி போடும் பணி நடந்தது. மாநில அளவில் 1 கோடி மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் 2.4 லட்சம் மாடுகளுக்கும், திருப்பூரில் 2.3 லட்சம் மாடுகளுக்கும், ஈரோட்டில் 2.6 லட்சம் மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டது. மாநில அளவில் 17 லட்சம் மாடுகளுக்கு இன்னும் தடுப்பூசி போடப்படவில்லை என தெரியவந்துள்ளது. விடுபட்ட மாடுகளுக்காக இந்த மாத இறுதி வரை சிறப்பு முகாம் நடத்தப்படும்.

## <u>வெப்ப சலனத்தால் தமிழகத்தில் மழை தொடரும் : வானிலை ஆய்வு மையம் தகவல்</u>




சென்னை: சென்னையில் நேற்றிரவு கனமழை கொட்டிக் தீர்த்த நிலையில், தமிழகத்தில் பரவலாக இன்று மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. வெப்ப சலனம் காரணமாக தமிழகத்தில் மழை பெய்து வருவதாக தெரிவித்துள்ள வானிலை மையம், சென்னை உட்பட தமிழகத்தில் இன்று பரவலாக மழை பெய்யும் என்றும் கூறியுள்ளது. சென்னையில் நேற்று இரவு கனமழை பெய்தது. இதனால் சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியதுடன், தாழ்வான இடங்களில் மழை நீர் குட்டை போன்று தேங்கி நின்றது. தாம்பரம், மேடவாக்கம், பட்டினபாக்கம், தேனாம்பேட்டை, தியாகராய நகர், கிண்டி உட்பட சென்னையில் பல்வேறு இடங்களில் பரவலாக நல்ல மழை பெய்தது. சென்னையில் சில இடங்களில் அதிகாலை முதல் வானம் மேகமூட்டமாக

காணப்படுகிறது. மதுரையை அடுத்த வாடிப்பட்டியிலும் நேற்றிரவு நல்ல மழை பெய்துள்ளது.

## விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அமராவதி அணையில் இன்று முதல் நீர்திறப்பு



சென்னை: விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அமராவதி அணையில் இருந்து இன்று முதல் தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். முதல்வர் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கை: திருப்பூர் மாவட்டத்திலுள்ள அமராவதி அணையிலிருந்து, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடக் கோரி வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டம் அமராவதி அணையிலிருந்து திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களிலுள்ள அமராவதி பாசன அமைப்பின்கீழ் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு செப்.22 (இன்று) முதல் தண்ணீர் திறந்து விட நான் உத்தரவிட்டுள்ளேன். இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 47,117 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தேயிலைக்கு கூடுதல் விலை



குன்னூர்: நீலகிரியில் சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் தேயிலை மகசூல் அதிகரித்து வந்தாலும் ஏல மையங்களில் தேயிலை தூளின் விற்பனை குறைந்துள்ளது. ஏல மையங்களுக்கு வரும் தேயிலை தூளும் வாரந்தோறும் 30 முதல் 35% வரை விற்பனையாகாமல் தேக்கமடைந்து வருவதால் பசுந்தேயிலைக்கு உண்டான விலையும் சரிந்தது. இந்நிலையில் இந்த வாரம் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.1 வரை விலை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. சாதாரண ரக பசுந்தேயிலை கிலோவுக்கு ரூ.13, நடுத்தரத்திற்கு ரூ.18, உயர் ரகத்திற்கு ரூ.23 வரை விலை வழங்கப்பட்டுள்ளது. பசுந்தேயிலை வரத்து குறைந்து வரும் நிலையில் அதன் விலை சற்று உயர துவங்கி உள்ளதால் வரும் வாரங்களில் தேயிலையின் விலை அதிகரிக்கும்.

## மாவட்டம் முழுவதும் கோமாரி நோய் தடுப்பு சிறப்பு முகாம் நீட்டிப்பு

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில், கோமாரி நோய் தடுப்பு முகாம்கள் மேலும் ஒரு வார காலத்துக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, மாவட்ட கலெக்டர் விவேகானந்தன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தர்மபுரி மாவட்டத்தில் 3,59,100 கால்நடைகள் உள்ளன. இந்த கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுக்க முன்னெச்சரிக்கையாக முகாம்கள் அமைக்கப்பட்டு, தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்துக்

கிராமங்களிலும் கடந்த 1ம் தேதி முதல் 21ம் தேதி வரை கோமாரி நோய் தடுப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாம்களில் இது வரை 2,68,250 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளன. விடுபட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போட, இந்த முகாம் வரும் 22ம் தேதி முதல் மேலும் ஒரு வாரத்துக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தங்களது கால்நடைகளுக்கு தவறாமல் தடுப்பூசி போட்டு பயனடைய வேண்டும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## <u>பயிர்களில் பூச்சி கட்டுப்படுத்த மருந்து தயாரிக்கும் பயிற்சி</u>

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உயிரியல் முறையில் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்கு பயன்படும் உயிர் எதிர்க்கொல்லிகள் தயாரிப்பு முறைகள் மற்றும் சூடோமோனஸ் ப்ளோரசன்ஸ் உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது. நிலைய தலைவர் சோழன் தலைமை வகித்தார். கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் ராமராஜ் கலந்து கொண்டு பயிற்சியை தொடங்கி வைத்து மகளிர் குழுக்களுக்கு சூடோமோனஸ் ப்ளோரசன்ஸ் தயாரிப்பது பற்றி செயல் விளக்கம் அளித்தார். உயிர் கொல்லிகள் தயாரிப்பு முறைகள் பற்றி உதவி பேராசிரியர்கள் சித்ரா, ரமேஷ் ஆகியோர் பயிற்சி அளித்தனர். கெலமங்கலம் வட்டாரத்தில் மண் பரிசோதனை செய்ய விவசாயிகள் ஆர்வம்

தேன்கனிக்கோட்டை, : கெலமங்கலம் வட்டாரம் ஒடையாண்டள்ளி கிராமத்தில் நடமாடும் மண் பரிசோதனை நிலையம் சார்பில் விளக்க முகாம் நடைபெற்றது. விவசாயிகளுக்கு மண் மாதிரி எடுக்கும் முறை, மண் மாதிரி எடுப்பதன் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் பற்றி நடமாடும் மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் பிரியா விளக்கினார். நிகழ்ச்சியில் சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் ஆர்வமாக கலந்து கொண்டு மண் மாதிரி கொண்டு வந்து மண் பரிசோதனை செய்து கொண்டு சந்தேகங்களை கேட்டறிந்தனர் என கெலமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராமலிங்கம் தெரிவித்தார். ஏற்பாடுகளை உதவி வோள ண்மை அலுவல ர்கள் தேவராஜன், ராஜ்கு மார் ஆகியோர் செய்திருந்தனர்.

## விவசாயிகள் குறைதீர்கூட்டம் 26ம் தேதி நடக்கிறது

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரியில் வரும் 26ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது. இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளின் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 26ம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட கலெ க்டர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. மாவட் ட கலெ க்டர் ராஜேஷ் தலைமை யில் கூட்டம் நடை பெறும். இந்த கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொ ண்டு தங்கள் குறைகளை தெரி வித்து நிவர்த்தி செய்துகொள்ளலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொள்ளிடம், திருத்துறைப்பூண்டியில் 6,000 கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி

கொள்ளிடம், : நாகை மாவட்டம் கொள்ளிடம், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. இதில் 6,000 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. கொள்ளிடம் அருகே உள்ள மாங்கனாம்பட்டு கிராமத்தில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நேற்று நடைபெற்றது. சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்புல இறுதியாண்டு மாணவிகள் மற்றும் கொள்ளிமம் அரசு கால்நடை மருத்துவர் சார்பில் நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூசி முகாமை ஊராட்சி தலைவர் ஏஷான்பீவி கமாலுதீன் துவக்கி வைத்தார். கால்நடைமருத்துவர் தேவயானி, கால்நடை ஆய்வாளர் வேல்முருகன், உதவியாளர் மாலதி ஆகியோர் அடங்கிய மருத்துவக்குழுவினர் 100 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டனர். வார்டு உறுப்பினர் பன் னீர், ஊராட்சி செயலாளர் செந்தில், மற்றும் கால்நடை உரிமையாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.அதேபோல் கொள் ளிடம் அருகே உள்ள எடமணல், வேட்டங்குடி, திருக்கருகாவூர், உமையாள்பதி, ஆலங்காடு, மாதானம், புதுப்பட்டினம், தாண்டவன்குளம், ஆகிய கிராமங்களிலும், கால்நடைகளுக்கு கடந்த மூன்று நாட்களில் 5

ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. கால்நடை மருத்துவர் யஸ்வந்த்ராவ், ஆய்வாளர் ராஜா, உதவியாளர் ராமச்சந்திரன் மற்றும் மருத்துவக்குழுவினர், கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போட்டனர். திருத்துறைப்பூண்டி: திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆலத்தம்பாடி ஜானகி அண்ணி அரசு மேல்நிலைப்பள்ளி நாட்டுநலப்பணித்திட்டங்கள், மன்னை கோட்ட கால்நடைபராமரிப்புத்துறை மற்றும் ஊராட்சி மன்றங்கள் சார்பில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. கால்நடை உதவி இயக்குநர் முகமதுகான் தலைமை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர்கள் ஆலத்தம்பாடி சசிகலா திருப்பதி, திருவலஞ்சுழி வீரமணி. திருத்தங்கூர் தவசிமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். திட்ட அலுவலர் சக்கரபாணி வரவேற்றார். உதவி மருத்துவர் ராமலிங்கம், மருத்துவர்கள் சுரேந்திரன், காவ்யா மற்றும் ஆய்வாளர்கள், உதவியாளர்கள் 913 பசு மாடுகள், 3 எருமை மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். திட்ட அலுவலர் குமணன் நன்றி கூறினார்.

**மயிலாடுதுறையில் 9 ஏக்கர் நிலத்தில் மாப்பிள்ளை சம்பா விதைப்பு**

**இயற்கை விவசாயத்திற்கு மாறிய விவசாயி**

மயிலாடுதுறை : மயிலாடுதுறை மாப்படுகையில் விவசாயி ராமலிங்கம் தனது 9 ஏக்கர் நிலத்தில் இயற்கை விவசாயத்தை மேற்கொள்ளும் விதமாக மாப்பிள்ளை சம்பா விதைப்பு செய்துள்ளார். விவசாயத்தில் ரசாயன உரங்களை பயன்படுத்த ஆரம்பித்தபோது ஆதிகால நெற்பயிர்கள் எல்லாம் ஒவ்வொன்றாக மறைய ஆரம்பித்தது. அதுபோன்று மறைந்ததுதான் மாப் பிள்ளை சம்பா ஆகும். இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும், அதுவும் பாரம்பரிய விதை நெல்லை உபயோகிக்க வேண்டும் என்று இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பிரசாரம் செய்து வலியுறுத்தியதன்பேரில் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இயற்கை விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இயற்கை விவசாயத்திற்கு எக்காரணத்தை முன்னிட்டும் ரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லி

மருந்துகளை அடிப்பதில்லை என்ற கொள்கையை விவசாயிகள் கடைபிடித்து வருகின்றனர். தாய்மார்கள் குழந்தைக்கு கொடுக்கும் தாய்ப்பாலிலும் யூரியா கலந்து விஷமாகியுள்ளது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். சாப்பிடும் சாப்பாடு உடலுக்கு மருந்துபோல் இருக்க வேண்டும் என்ற காலம் மாறி தற்பொழுது உணவு விஷ மாக மாறி வருகிறது. இதிலிருந்து தப்பிப்பதற்கு இயற்கை வேளாண்மையை அனைவரும் ஊக்குவித்து வருகின்றனர். இந்நிலையில் நாகை மாவட்டம் மயிலாடுதுறை மாப்படுகையை சேர்ந்த விவசாயி ராமலிங்கம் என்பவர் தனது 9 ஏக்கர் நிலத்தில் மாப்பிள்ளை சம்பா என்ற நெல்லை விதைத்து வருகிறார். வயலில் புழுதி அடித்து அதில் பட்டம் போட்டு ஏக்கர் ஒன்றுக்கு 15 கிலோ விதை நெல்லை நடவு ஆள் மூலம் ஒவ்வொரு விதை யாக நெல்லை விதைத்து வருகிறார். இதுகுறித்து விவசாயி ராமலிங்கம் கூறும்போது, நெல்விதைப்பு செய்வதற்காக நடவு ஆட்கள் மூலம் இந்த மாப்பிள்ளை சம்பா விதையை பட்டம்போட்டு நடவுசெய்வது போல் விதை ஊன்றப்படுகிறது. இதற்காக நிலம் சமன்படுத்தப்பட்டுள்ளது. 9 ஏக்கரும் நெல் விதைக்கப்பட்ட பிறகு சீராக தண்ணீர் வைக்கப்படும். இந்த விவசாயத்திற்கு அதிகமான தண்ணீர் தேவைப்படாது. காய்ச்சல் மற்றும் பாய்ச்சல் மூலம் இந்த விவசாயத்தினை செய்ய இருக்கிறேன். எக் காரணத்தை முன்னிட்டும் ரசாயன உரமோ அல்லது ரசாயன பூச்சிக்கொல்லி மருந்தை யோ நான் உபயோகப்படுத்த மாட்டேன். பஞ்சகவ்யம், அமிர்தகரைசல், வேப் பம் பிண்ணாக்கு, வேப்பெண்ணெய் போன்ற இயற்கை பூச்சிக்கொல்லி போன்றவற்றை மட்டுமே உபயோகப்படுத்தப் போகிறேன். இந்த மாப் பிள்ளை சம்பா விளைந்தால் நல்ல மகசூல் கிடைக்கும். மழைநீர் தேங்கினால்கூட ஒருவாரம் வரை பயிர் மூழ்கினாலும் அழுகாது, செயற்கை உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து போட்ட பயிர்கள் நீரில் மூழ்கினால் 2 அல்லது மூன்று நாட்களுக்குள் அழுகிவிடும். மேலும் மாப்பிள்ளை சம்பாவுக்கு அதிக வரவேற்பு இருக்கிறது. ரசாயன உரம் கலந்த அரிசியினை வாங்கி உண்டு விஷத்தை உடலில் ஏற்றிக்கொள்வதைவிட இயற்கையான நஞ்சு அற்ற அரிசியினை வாங்க பொதுமக்கள் பலர் முன் வருகின்றனர்.

எதிர்காலத்தில் இயற்கை விவசாயத்திற்கும் அவர்களால் விளைவிக்கப்பட்ட நெல் மற்றும் காய்கறிகளுக்கும் நல்ல வரவேற்பு இருக்கும் என்றார்.

## வாய்மேடு கிராமத்தில் சம்பாநெல் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி சிக்கல் வேளாண். அறிவியல் மையம் ஏற்பாடு

நாகை, : நாகை மாவட்டம் சிக்கல் வேளாண். அறிவியல் நிலையத்தின் சார்பில் வேதாரண்யம் வட்டம் வாய்மேடு கிராமத்தில், வேதாரண்யம் பகுதிக்கேற்ற சம்பா நெல் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. பயிற்சிக்கு வேளாண் அறிவியல் நிலைய தலைவர் முனைவர் ராஜேந்திரன் தலைமை வகித்து வறட்சியை தாங்கி வளரக்கூடிய அண்ணா 4 என்ற நெல் ரகம் குறித்து விளக்கினார். வாய்மேடு கிராமத்தை சேர்ந்த காவிரி மேம்பாட்டு ஆலோசனைக்குழு உறுப்பினர் பரமேஸ்வரன் வரவேற்றார். ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் முனைவர் ரா.ராஜேந்திரன் நெல் விதைப்பில் பருவம், ரகங்கள், நீர் மேலாண்மை, களை மேலாண்மை, பயன்படுத்தப்படும் களைக்கொல்லிகள் ஆகியவை குறித்து விளக்கினார். பிலிப்பையன்ஸ் நாடுகளில் உள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற வேளாண். விஞ்ஞானியும், சர்வதேச வேளாண் ஆலோசகரும், பயிற்றுனருமான முனைவர் பாலசுப்பிரமணியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, வேதாரண்யம் பகுதிகளில் நீர் மேலாண்மையின் முக்கியத்துவம், மழைநீர் சேகரிப்பு, நெல் சார்ந்த பிற வேளாண் தொழில்களை மேற்கொள் வது குறித்து பேசினார். வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர்கள் முனைவர் அனு ராதா, முனைவர் ரவி, முனைவர் அழகர், முனை வர் திலகம், தொழில்நுட்ப அலுவலர் ஞானபாரதி, வட்டார வேளாண். அலுவலர் பாலசுப்பிரமணியன், உதவி வேளாண். அலுவலர்கள் ரவி, எழிலரசி மற்றும் பலர்கலந்து கொண்டனர்.

## நெற்பயிர்களில் நோய் தாக்குதல்

ஈரோடு: நெற்பயிர்களில் பஞ்சு அசுவினி தாக்குதல் தொடங்கி உள்ளதால் விளைச்சல் பாதிக்கும் அபாயம் உள்ளதாக விவசாயிகள் கவலை யடைந்துள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி, காலிங்கராயன்,

தடப்பள்ளி அரக்கன்கோட்டை, மேட்டூர் மேற்கு கரை உள்ளிட்ட பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதில் கீழ்பவானி, காலிங்கராயன், மேட்டூர் மேற்கு கரை உள்ளிட்ட பாசன பகுதிகளில் நெல் நாற்று நடப்பட்டு விட்டது. வளர்ந்து வரும் நெற்பயிர்களை பஞ்சு அசுவினி நோய் தாக்குதல் தொடங்கி உள்ளதால் விளைச்சலை பாதிக்கும் என்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். பஞ்சு அசுவினி, பப்பாளி பூச்சி, வெள்ளை அசுவினி என பல பெயர்களில் அழைக்கப்படும் பஞ்சு அசுவினி பூச்சியானது காற்றின் மூலம் பரவக்கூடியது என்பதால் இதை முழுமையாக கட்டுப்படுத்த முடியாத நிலை உள்ளது. ஆரம்பத்தில் பப்பாளி மற்றும் கொய்யா பழங்களை மட்டும் தாக்கி வந்த பஞ்சு அசுவினி தற்போது அனைத்து பயிர்களையும் தாக்கத்துவங்கி உள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: பப்பாளி, கொய்யா ஆகிய மரங்களில் மட்டுமே காணப்பட்ட பஞ்சு அசுவினி பூச்சி தாக்குதல் தற்போது நெற்பயிர்களையும் தாக்க தொடங்கி உள்ளது. இந்த பூச்சி நெற்பயிர்கள் அட்டை பூச்சிபோல ஒட்டிக்கொள்வதால் நெற்பயிரின் வளர்ச்சி தடைபடும். இதனால் விளைச்சல் பாதியாக குறைந்துவிடும். பஞ்சு அசுவினி தாக்குதல் உள்ள பயிர்களுக்கு மருந்து தெளித்தால் அருகில் உள்ள பயிர்களுக்கு சென்று தாக்குதலை தொடர்கின்றது. இதனால் இதை முழுமையாக கட்டுப்படுத்த முடியாத நிலை உள்ளது. எனவே பஞ்சு அசுவினியை கட்டுப்படுத்த, அதை அழிக்கக் கூடிய ஒட்டுண்ணிகளை வேளாண்துறையினர் வழங்க வேண்டும்'' என்றனர்.

## <u>செட்டிக்குளம் வணிக வளாகத்தில் 16 டன் வெங்காயம் ரீ1.8 லட்சத்திற்கு ஏலம்</u>

பெரம்பலூர் : செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் 16 டன் வெங்காயம் ரூ.1.8 லட்சத்திற்கு ஏலம் மூலம் விற்பனையானது. பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுக்கா, செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் 18ம் தேதியன்று சின்ன வெங்காயம் திறந்த முறை ஏலம் நடைபெற்றது. இதில் இரூர், செட்டிக்குளம், ஈச்சங்காடு, நாட்டார்மங்கலம், அம்மாபாளையம் ஆலத் தூர், பாடாலூர், வெங்கனூர், சிறுவயலூர்,

சக்திரமனை, பொம்மனப்பாடி ஆகிய கிரா மங்களைச் சேர்ந்த 50 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை கொண்டுவந்து விற்பனை செய்தனர். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம், விழுப்புரம் மாவட்டம் சின்ன சேலம், கரூர்மாவட்டம் லாலாபேட்டை, திருச்சி மாவட்டம் துறையூர், தாத்தையங்கார் பேட்டை மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தைச்சேர்ந்த 14 வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். விவசாயிகள் கொண்டு வந்திருந்த 245 மூட்டை அதாவது 16ஆயிரத்து 54 கிலோ சின்ன வெங்காயத்தை வியாபாரிகள் மற்றும் விதை வெங்காய விவசாயிகள் ஏலத்தில் எடுத்தனர். இதில் பழைய பட்டறை வெங்காயம் அதிகப்பட்சமாக ரூ.11க்கும், புது வெங்காயம் கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.18க்கும், சராசரியாக கிலோ ஒன்றுக்கு ரூ.11க்கும் விலைகிடைத்தது. இதன்மூலம் ரூ1 லட்சத்து 72 ஆயிரத்து 214க்கு விற்பனை நடைபெற்றது. இதனை பெரம்பலூர் கலெக்டர் தரேஸ் அகமது தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>விவசாய உற்பத்தியாளர் அமைப்பு நிறுவனம் மூலம் கூடுதல் லாபம் பெறலாம்</u>**



இலுப்பூர், விவசாயஉற்பத்தியாளர் அமைப்பு நிறுவனம் மூலம் கூடுதல் லாபம் பெறலாம் என வேளாண்மை இணை இயக்குனர் ஆலோசனை தெரிவித்தர. உழவர்மன்ற அமைப்பாளர்கள் புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தில் இரண் டாவது காலாண்டிற்கான உழவர் மன்ற அமைப்பாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மை இணை இயக்குனர் ஷாஜகான் தலைமை தாங்கித் தொடங்கி வைத்துப் பேசினார்: அப் போது அவர் பேசிய தாவது:- உழவர் மன்ற அமைப் பாளர்கள் தங்கள் பகுதிகளில் விவசாயிகளை ஒருங் கிணைத்து விவசாய-உற்பத் தியாளர் அமைப்பு நிறுவனத் தினைத் தொடங்கி தரமான இடுபொருட்கள் குறைந்த விலையில் பெற்று விளை பொருட்களை நல்ல விலைக்குச் சந்தைப்படுத்தி கூடுதல் இலாபம் பெறலா மெனவும் இதற்கு உழவர் மன்ற அமைப்பாளர்கள் உறு துணையாக இருக்கவேண்டு எனவும் தெரிவித்தார். இப்பயிற்சியில் நபார்டு மாவட்ட வளர்ச்சி அதிகாரி சோமசுந்தரம் கலந்து கொண்டு விவசாய-உற்பத்தி யாளர் நிறுவனம் தொடங்கும் வழிமுறைகளையும் விவசாயி கள் தங்களால் உற்பத்தி செய்யப்படும் விளை பொருட் களை இடைத்தரகர்கள் இல்லாமல் நல்ல விலைக்கு விற்பனை செய்யலாமெனவும் குழுவாகச் செயல்படும் போது அதிக நன்மைகள் கிடைக்கு மெனவும் எடுத்துக்கூறினார். மேலும் நபார்டு வங்கியின் மூலம் செயல்படுத்தப்படும் வேளாண் திட்டங்களையும் உழவர் மன்ற அமைப்பாளர் களுக்கு விளக்கிக் கூறினார். முன்மாதிரியாக குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குனர் சாந்தி பயிற்சியில் கலந்து கொண்டு உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு தொழில்நுட்பங்களைக் கடை பிடிப்பதில் மற்ற விவசாயிகளுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டுமெனவும் விவசாய-உற்பத்தியாளர் நிறுவனம் தொடங்கி அனை வரும் பங்கேற்றுப் பயன்பெற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். புதுக்கோட்டை வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறைத் துணை இயக்குனர் முகமது அப்துல் நசீர் பயிற்சியில் கலந்துகொண்டு விவசாய-உற்பத்தியாளர் நிறுவனத்தின் பலன்களையும் வேளாண் வணிகத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங் களையும் படக்காட்சிகள் மூலம் விளக்கிக்கூறினார். குறும்பட விளக்கம் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் ராஜசேகரன் பயிற்சியில் கலந்துகொண்ட

உழவர் மன்ற அமைப்பாளர் களுக்கு நடப்புப் பருவத்தில் செயல்படுத்தப்படவேண்டிய வேளாண் தொழில்நுட்பங் களைப் படக்காட்சிகள் மூலமும் குறும்படம் மூலமா கவும் விளக்கிக்கூறினார். பயிற்சியில் கலந்துகொண்ட உழவர் மன்ற அமைப்பாளர்க ளுக்கு இரண்டாம் காலாண் டிற்கான உழவர் நண்பன் எனும் தொழில்நுட்பக் கையேடு மற்றும் பயிற்சி ஊக்கத்தொகை வழங்கப் பட்டது. உழவர் மன்ற அமைப்பாளர்கள் கூவாட்டுப் பட்டி முருகேசன், கறம்பக்காடு காமராஜ், வடகாடு மனோன் மணி, திருமலைராயசமுத்திரம் முத்துலட்சுமி, கிள்ளுக் கோட்டை லாரன்ஸ் ஆகி யோர் உழவர் பயிற்சி நிலையச் செயல்பாடுகள் குறித்து பாராட்டிப் பேசினார்கள். பயிற்சியின் முடிவில் வேளாண்மை அலுவலர் ராஜ சேகரன் நன்றி கூறினார்.

## <u>உணவு பாதுகாப்பு திட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் தேர்வு 29–ந்தேதி நேர்காணல்</u>



திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்டத்தில் வேளாண்மை துறையில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் செயல்படுகிறது. இந்த திட்டத்தில் ஆலோசகர், தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். விண்ணப்பிக்க விரும்புபவர்கள், தகுதி சான்றிதழ்கள் மற்றும் விண்ணப்பங் களுடன் வருகிற 29–ந்தேதி (திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள வேளாண்மை இணை இயக்குனர்

அலுவலகத்தில் நடக்கும் நேர்காணலில் கலந்து கொள்ளலாம். இந்த தகவலை கலெக்டர் வெங்கடாசலம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்து உள்ளார்.

**<u>ஆத்தூர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 2 ஆயிரம் மூட்டை மஞ்சள் ரூ.66 லட்சத்திற்கு ஏலம்</u>**



ஆத்தூர் புதுப்பேட்டையில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் மஞ்சள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்திற்கு சுமார் 2 ஆயிரம் மூட்டை மஞ்சளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில் நாமக்கல், ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் பலர் கலந்து கொண்டு மூட்டை மூட்டையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த மஞ்சளின் தரத்தை பார்த்து ஏலம் எடுத்தனர். விரலி ரகம் மஞ்சள் குவிண்டால் ரூ.4 ஆயிரத்து 409–ல் இருந்து ரூ.6 ஆயிரத்து 709 வரைக்கும், உருண்டை ரகம் மஞ்சள் குவிண்டால் ரூ.4 ஆயிரத்து 509–ல் இருந்து ரூ.6 ஆயிரத்து 309 வரைக்கும் ஏலம் போனது. முடிவில், 2 ஆயிரம் மூட்டை மஞ்சள் ரூ.66 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**<u>பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டால் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு பெறலாம் கலெக்டர் ராஜாராமன் பேச்சு</u>**



சிவகங்கை ஒக்கூர் புதூரில் நடைபெற்ற வெண்பட்டு விழிப்புணர்வு கருத்தரங்கில் நலத்திட்ட உதவிகளை கலெக்டர் ராஜாராமன் வழங்கிய காட்சி.

பட்டுப்புழு வளர்ப்பில் ஈடு பட்டால் ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு பெறலாம் என்று கலெக்டர் ராஜாராமன் கூறினார். விழிப்புணர்வு கருத்தரங்கு சிவகங்கையை அடுத்த ஒ.புதூர் அரசு பட்டுப் பண்ணையில் தமிழக அரசின் பட்டுவளர்ச்சி துறை மற்றும் மத்திய பட்டுஆராய்ச்சி விரி வாக்க மையம் ஆகியவை இணைந்து வெண்பட்டு விழிப் புணர்வு கருத்தரங்கம் நடத்தி னர். நிகழ்ச்சிக்கு கலெக்டர் ராஜாராமன் தலைமை தாங்கி பேசியதாவது:–சிவகங்கை மாவட்டத்தில் 150 ஏக்கரில் 90 விவசாயிகள் பட்டுபுழு வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். நடப்பு ஆண்டில் 7ஆயிரத்து 500 கிலோ வெண்பட்டு கூடுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. மாநில சமவளர்ச்சி திட்ட நிதியின் கீழ் கடந்த 2013–14ம் ஆண்டில் சிவகங்கை மாவட்டத்தில் 25 பட்டு விவ சாயி களுக்கு ரூ.35 லட்சத்து 94 ஆயிரம் மதிப்பிலான மல்பெரி நடவு மானியம், புழு வளர்ப்பு மனை மற்றும் தள வாடங்கள் வழங்கப்பட்டுள்ளது. பல்முனை பட்டு நூற்பு மையம் பட்டு வளர்ச்சிதுறை உதவி யுடன் முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும் பல்முனை பட்டு நூற்பு மையம் இளை யான்குடியில் ரூ.10 லட்சம் மானியத்துடன் செயல்படுத் தப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்ட விவசாயிகள் உற் பத்தி செய்யும் வெண்பட்டு கூடுகளுக்கு நியாயமான விலை கொடுத்து கொள்முதல் செய்வதற்காக ரூ.14 லட்சம் மதிப்பில் பல்முனைபட்டு நூற்பு எந்திரம் சிவகங்கையில் உள்ள அரசு பட்டு

நூற்பகத்தில் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் பட்டு வளர்ச்சியில் ஈடுபடும் விவ சாயிகளுக்கு ஆண்டு முழுவ தும் வேலைவாய்ப்பு பெறும் நிலை உள்ளது. இதன் மூலம் குடும்ப வருமானத்தை பெருக்கி கொள்ள முடியும். இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் 6 பேருக்கு ரூ.2 லட்சத்து 68 ஆயிரத்து 875 மதிப்பில் மாநில சமச்சீர் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நிதி உதவியும், 4 பேருக்கு தளவாட சாமான்கள் வாங்க ரூ.2 லட்சமும், ரூ.69 ஆயிரத்து 600 மதிப்பில் சொட்டு நீர்பாசனம் அமைக்க 2 பேருக்கு பணி உத்தரவையும் கலெக்டர் ராஜாராமன் வழங் கினார். நிகழ்ச்சியில் சேலத்தில் உள்ள மத்திய பட்டுவாரியத்தின் விஞ்ஞானி சிக்கனா, துணை இயக்குனர் ராஜன் மற்றும் விஞ்ஞானிகள் செல்வராஜ், டேனியல், சுப்பிரமணியன், ஆல்பர்ட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதை யொட்டி பட்டுப்புழு வளர்ப்பு பரிமாண வளர்ச்சி குறித்த கண்காட்சி நடைபெற்றது.

## <u>ஆந்திராவில் இருந்து தஞ்சைக்கு 1,315 டன் டி.ஏ.பி. உரம் சரக்குரெயிலில் கொண்டு வரப்பட்டது</u>



தஞ்சாவூர், ஆந்திராவில் இருந்து தஞ்சைக்கு 1,315 டன் டி.ஏ.பி. உரம் சரக்குரெயிலில் கொண்டு வரப்பட்டது. <u>சம்பா சாகுபடி</u> தமிழகத்தின் நெற்களஞ்சியமாக காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூரில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடை பெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். தற்போது காவிரி டெல்டா பகுதிகளில் சம்பா, தாளடி சாகுபடி பணிகள்

தொடங்கியுள்ளன. தஞ்சை மாவட்டத்தில் 2014–15–ம் ஆண்டு சம்பா மற்றும் தாளடி பருவத்தில் 1 லட்சத்து 38 ஆயிரத்து 660 எக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றனர். சம்பா, தாளடி நெல் சாகுபடிக்கு தேவையான உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும் வெளிமாநிலங்களில் இருந்து கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலம் உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. இந்தநிலையில் ஆந்திரமாநிலம் காக்கிநாடா துறைமுகத்தில் இருந்து டி.ஏ.பி. உர மூட்டைகள் சரக்குரெயிலில் ஏற்றப்பட்டது. 1,315 டன் டி.ஏ.பி. உரம் அந்த ரெயில் தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்றுகாலை வந்தது. பின்பு சரக்குரெயிலில் இருந்து டி.ஏ.பி. உர மூட்டைகள் தஞ்சை கூட்டுறவு விற்பனை இணைய மண்டல அலுவலர்கள் செந்தில்குமரன், பழனிவேலு, இணைய கிடக்கு காப்பாளர் மாறன் ஆகியோர் முன்னிலையில் லாரிகளில் ஏற்றப்பட்டு தஞ்சை மாவட்டத்தில் உள்ள தொடக்க கூட்டுறவு வேளாண்மை கடன் சங்கம் மற்றும் சேமிப்பு கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டன. மொத்தம் 21 வேகன்களில் 1,315 டன் டி.ஏ.பி. உரம் வந்திருந்தது. இந்த உரங்கள் சம்பா, தாளடி சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு தங்குதடையின்றி வினியோகம் செய்யப்பட உள்ளது.

## கூடலூரில் மானாவாரி நிலங்களில் மொச்சை பயிர் சாகுபடி



கூடலூர் பகுதியில் மானா வாரி நிலங்களில் விவசாயி கள் ஆர்வத்துடன் மொச்சைப்பயிர் சாகுபடி செய்து வருகின்றனர். மொச்சை சாகுபடி தேனி மாவட்டம், கூடலூர் மேற்குத் தொடர்ச்சி மலை யடிவாரத்தில் ஏகலூத்து,

கல்உடைச்சான்பாறை, குறுக்குவழிச்சாலை, பெருமாள் கோவில்புலம, சரித்திரவு, கழுதைமேடுபுலம், புதுரோடு, பளியன்குடி, எள்கரடு உள்பட பல்வேறு பகுதிகள் உள்ளன. இந்த பகுதிகளில் ஏராளமான மானாவாரி நிலங்கள் உள்ளன. இதில் விவசாயிகள் எள், தட்டைப்பயறு போன்றவை சாகுபடி செய்து இருந்தனர். இந்த பயிர்களுக்கு நடுவில் மொச்சை பயிர் ஊடுபயிராக விவசாயிகள் நடவு செய்து இருந்தனர். இப்பகுதியில் தென்மேற்கு பருவமழை பெய்ததால் எதிர்பார்த்த அளவு எள், தட்டைப்பயறு மகசூல் கிடைத்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நல்ல வளர்ச்சி மேலும் ஊடுபயிராக விதைக்கப்பட்ட மொச்சை செடிகளும் நன்கு வளர்ந்துள் ளது. இதனால் விவசாயிகள் பயிர்களுக்கு இடைப்பட்ட நிலங்களை உழுதும், களை எடுத்தும் பூச்சிகள் தாக்காதபடி மருந்துகள் தெளித்து வரு கின்றனர். இப்பகுதிகளில் விளையும் மொச்சைக் காய்களுக்கு தனி தேவை உள்ளதால் சிவசாயிகள் மொத்தமாகவும் மானாவாரி நிலங்களில் மொச்சை சாகுபடி செய்துள்ளனர். ஐப்பசி, கார்த்திகை மாதங் களில் மொச்சைக்காய்கள் விற் பனைக்கு வரத் தொடங்கும். மொச்சைக்காய்கள் போடி, பெரியகுளம் உள்பட தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், மதுரை, திருப்பூர், சென்னை உள்ளிட்ட பிற நகரங்களுக்கும் விற்ப னைக்காக கொண்டு செல்லப் படுவது வழக்கம். இந்த ஆண் டும் மகசூல் அதிக அளவில் கிடைத்து போதிய விலை கிடைக்கும் என்று விவசாயிகள் ஆவலுடன் எதிபார்த்து காத்திருக்கின்றனர்.

## நீடாமங்கலத்தில் விவசாயிகள் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



நீடாமங்கலம், பழைய பயிர்க்காப்பீட்டு திட்டம் தொடரும் என அறிவித்த முதல்- அமைச்சர் ஜெயலலி தாவுக்கு நன்றி தெரிவித்து விவசாயிகள் இனிப்பு வழங்கினர். முதல்-அமைச்சர் அறிவிப்பு தேசிய வேளாண்மை காப் பீட்டு நிறுவனத்தால் திருத்தி அமைக்கப்பட்ட புதிய பயிர்க்காப்பீட்டு திட்டம் அமல்படுத்தப்பட்டது. இந்த திட்டம் பாதிப்பை ஏற்படுத் துவதால், பழைய பயிர்க் காப் பீட்டு திட்டத்தையே அமல் படுத்த வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலையில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை நீக்கும் வகையில் பழைய முறையிலான பயிர்க் காப்பீட்டு திட்டம் தொடரும் என முதல்-அமைச்சர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் அறிவித்தார். இனிப்பு வழங்கினர். முதல்-அமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நீடாமங்கலத்தில் விவசாயிகள் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கினர். முன்னதாக நீடாமங்கலம் ரெயிலடியில் இருந்து ஊர்வலம் நடை பெற்றது. இதில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின் போது பட்டாசு வெடித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப் பட்டது. நிகழ்ச்சிக்கு தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் பயிரி கிருஷ்ணமணி தலைமை தாங்கினார். தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் சங்கர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன், கூட்டுறவு விவசாய வங்கி தலைவர் ஷாஜகான், துணைத் தலைவர் அப்பு, நகர அவைத் தலைவர் ராமு, முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் வீரையன், நடராஜன் உள்பட பலர் கலந்து கொண்ட னர்.

**முத்தூர் அருகே விவசாயியின் வீட்டில் மேல்நோக்கி காய்த்துள்ள பச்சைமிளகாய்**



திருப்பூர் மாவட்டம் முத்தூர் அருகே உள்ள மலையத்தாபாளையம் சீனிவாச நகரை சேர்ந்தவர் மாதப்பகவுண்டர் (வயது 55). பால் வியாபாரியான இவர் பொருளாதார நிலையை மேம்படுத்த கால்நடைகளை வளர்த்து கொண்டு விவசாயம் செய்து வருகிறார். இந்நிலையில் இவரது வீட்டுத்தோட்டத்தில் கடந்த 40 நாட்களுக்கு முன்பு வைக்கப்பட்ட மிளகாய் நாற்றுகள் நன்கு மிளகாய் செடிகளாக வளர்ந்துள்ளன. இதில் ஒரு மிளகாய் செடியில் அதிசயமாக பச்சை மிளகாய்கள் மேல்நோக்கி காய்த்துள்ளன. இதுபற்றி விவசாயி மாதப்பகவுண்டர் கூறியதாவது:– பொதுவாக மிளகாய் செடிகளில் மிளகாய்கள் சிறிய பிஞ்சில் இருந்து காம்புகள் மேலேயும் கூம்பு வடிவ விதைப்பகுதிகள் கீழேயும் உள்ளது போல் காய்க்கும். ஆனால் இந்த மிளகாய் செடியில் பச்சை மிளகாயின் விதைப்பகுதிகள் மேல்நோக்கி காய்த்துள்ளன. இதற்கு முன்பு இதுவரை மிளகாய் செடிகளில் பச்சை மிளகாய்கள் மேல் நோக்கி காய்த்துள்ளதை கேள்விப்பட்டதுமில்லை, கண்டதுமில்லை. ஆனால் தற்போது எனது வீட்டில் வித்தியாசமான முறையில் அதிசயமாக பச்சை மிளகாய்கள் மேல்நோக்கி காய்த்துள்ளது. இது எங்களது குடும்பத்திற்கு மிகுந்த ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.